# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

## அசல் வழக்கு எண் 243/2013

**பிரதிவாதி தரப்பு சாட்சி-1 கனகராஜ் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 07.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்து சின்னையம்பாளையம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் கடந்த 1997 முதல் 2018 வரை இராணுவத்தில் பணியாற்றினேன். பணி ஓய்வுக்குபின் திருச்சி திருவெறும்பூரில் வசித்து வந்தேன். பின்னிட்டு முசிறியில் வேலை கிடைத்ததால் முக்கொம்பில் வசித்து வருகிறேன். நானும், என் மனைவியும் சின்னையம்பாளையம் கிராமத்தில் வசித்ததில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்தீர்ணம் 4 ஏக்கர் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி 4 ஏக்கர் நிலத்தையும் நான் விலைக்கு வாங்கினேனா என்றால் இல்லை. சர்வே எண்.386/1 ஏ, 386/2 ஏ, 386/3 ஏ ஆகியவற்றில் 2.93 ஏக்கர் நிலத்தை முத்துப்பிள்ளை (எ) முத்துச்சாமியிடமிருந்து என் மனைவி கிரையம் பெற்றார்.

2) முத்துப்பிள்ளை எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் சின்னையம்பாளையத்தில் இருந்தார். பி.சா.ஆ.1 ஆவணத்தில் முத்துப்பிள்ளை எந்த ஊரைச் சேர்ந்தவர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் திருச்சி மாவட்டம், பெரியபட்டி கிராமம், வளந்த நகரம் என்ற இடத்தில் வசிப்பதாக எனது கிரைய ஆவணத்தில் அவரது முகவரி கண்டுள்ளது. பொதுவாக ஒரு சொத்தை கிரையம் பெறும்பொழுது அதில் ஏதேனும் வில்லங்கம் உள்ளதா என பார்த்து வாங்கவேண்டும் என்றால் சரிதான். பி.சா.ஆ-1 கிரையம் பெறுவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த வில்லங்க சான்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். பி.சா.ஆ-3 வில்லங்க சான்றிதழ் எனது கிரைய ஆவணத்திற்கு பின்னிட்டு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் கிரையம் பெறுவதற்கு முன்பு வில்லங்க சான்று பார்த்திருந்தால் வாதி தாவா சொத்தை கிரையம் பெற்ற விபரம் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

3) முத்துச்சாமிப்பிள்ளை நான் அ.வ.எண்.4/2014 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வாதிக்கு எதிராக அ.வ.எண். 246/2003 வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி வழக்கில் முத்துசாமிப்பிள்ளைக்கு எதிராக அந்த வழக்கு தள்ளுபடியானது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி வழக்கு நான் கிரையம் பெற்ற சொத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட விபரம் எனக்கு பின்னிட்டாவது தெரியுமா என்றால் தெரியாது. முத்துசாமிபிள்ளை அவர் பெயரில் பட்டா ஏற்பட்டதன் அடிப்படையில்

கிரையம் செய்ததாக பி.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் அவர் பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வந்ததாக கண்டுள்ளது. முத்துச்சாமிபிள்ளையின் சொந்த ஊர் திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம் என்றும், அவர் தாவா சொத்தை எப்போதும் அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. பச்சையப்பபிள்ளை என்பவரை தெரியுமா என்றால் அவர் சின்னையம்பாளையம் ஊர் தலைவராக இருந்ததால் தெரியும். பச்சையப்பிள்ளையின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

4) பச்சையப்பபிள்ளையின் தகப்பனார் பெயர் பொன்னுசாமி என்றும், அவரும் சின்னையம்பாளையம் கிராமத்தில்தான் பல ஆண்டுகளாக வசித்து வந்தார் என்றால் கேள்விபட்டிருக்கிறேன் பார்த்ததில்லை. தாவா சொத்து ஆதியில் பொன்னுசாமிக்கும், அவருக்கு பின்னிட்டு அவரது மகன் பச்சையப்பபிள்ளைக்கும் பா த்தியப்பட்டது என்றால் சரியல்ல. அதனடிப்படையில் தான் 03.05.2006 ல் வாதி பச்சையப்பபிள்ளையிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. என் மனைவி முசிறியை சேர்ந்தவர். மேற்படி விபரங்கள் அனைத்தும் எனக்கும் என் மனைவிக்கும் தெரியும் என்றால் சரியல்ல. நானும், என் மனைவியும் தாவா சொத்திற்கு எப்போதும் சென்றதில்லை என்றால் சரியல்ல. என் மனைவி மற்றும் என் பெயரில் தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் இருக்கிறதா என்றால் இல்லை. விண்ணப்பித்து இருக்கிறோம்.

5) வாதி தாவா சொத்தை கிரையம் பெற்றது தெரிந்திருந்தும், முத்துப்பிள்ளை, நான், என் மனைவி ஆகியோர் சேர்ந்து முத்துப்பிள்ளையிடம் ஒரு கிரைய ஆவணத்தை மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதி பாலசுப்பிரமணியன் கிரையம் பெற்ற விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் இந்த வழக்கிற்கு பின்னிட்டுதான் தெரியும். பின்னிட்டுதான் நான் அ.வ.எண்.4/2014 வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அவ.எண்.4/2014 ல் முத்துப்பிள்ளையை தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், முத்துப்பிள்ளையை தரப்பினராக சேர்த்துவிட்டு, அவர் இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. முத்துப்பிள்ளைக்கும், சின்னையம்பாளையம் கிராமத்திற்கும் என்ன தொடர்பு என்றால் அவரது சொத்து மேற்படி கிராமத்தில் உள்ளது. அவர் அனுபவம் செய்து வந்தார்.

6) முத்துப்பிள்ளை எந்த காலத்திலும் தாவா சொத்தை அனுபவம் செய்ததில்லை என்றும், நானும், என் மனைவியும் சேர்ந்து நில உடைமை மேம்பாட்டுதிட்டத்தின்போது முத்துப்பிள்ளை பெயரில் பட்டா பெறப்பட்டு, அதன் அடிப்படையில் என் மனைவி பெயரில் பி.சா.ஆ.1 ஏற்படுத்திகொண்டோம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ-1 பின்னிட்டு நானோ, என் மனைவியோ தாவா சொத்தில் எப்போதும் சுவாதீனத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்து கிரைய தேதியன்று வாதி பெயரில் இருந்தது

என்றும், அது தெரிந்தே நான் தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும், என் மனைவிக்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து நான் கிரையம் பெற்ற முத்துப்பிள்ளை குடும்பம் மற்றும் வாதிக்குமிடையே கிரைய உடன்பாடு ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்து நான் கிரையம் பெற்ற தேதியில் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**

Kulithalai.